# பிலாவலி சிவன் ஆலயம், தேவாஸ்

சாந்திப்பிரியா



இந்தியாவில் மத்தியப் பிரதேசத்தில் உள்ள பல ஆலயங்கள் பிரசித்தி பெற்றவை. அனைத்து ஆலயங்களின் வரலாறுகளும் கிடைக்கவில்லை என்றாலும் ஆலய மகிமைகளை கிராமிய மக்கள் பரம்பரை பரம்பரையாக வாய் மொழி செய்தியாகவே தெரிவிக்கின்றனர். அப்படிப்பட்ட ஆலயங்களில் ஒன்றுதான் இந்தூர் மற்றும் உஜ்ஜயினி இரண்டுக்கும் இடையில் உள்ள தேவாஸ் எனும் சிற்றூரில் உள்ள பிலாவலி சிவன் ஆலயம் ஆகும். அந்த ஆலயத்தின் உண்மையான பெயர் மஹாகாளீஸ்வரர்

ஆலயம் என்பதாகும். உஜ்ஜயினியில் உள்ள மகாகாளீஷ்வர் ஆலயத்திற்கும் இதற்கும் உள்ள சகோதர பந்தமே அந்த பெயர் ஏற்பட்டதின் காரணம் ஆகும் .

ஆலயம் சிறு குன்று போன்ற இடத்தில், ஆக்ரா மற்றும் பாம்பே பிரதான சாலை அருகே அமைந்து உள்ளது. அந்த ஆலயத்தில் உள்ள சிவலிங்கம் நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட ஸ்வயம்பு லிங்கம் எனக் கூறுகின்றனர். ஆலயத்தின் உள்ளே சுமார் ஒரு அடி உயரத்தில் முன் இருந்த சிவலிங்கம், இன்று மூன்றடிக்கும் உயரத்தில் வளர்ந்து உள்ளது. ஆலயத்தின் எதிர்புறத்தில் அனுமான் சன்னதியும், கால பைரவர் சன்னதியும் அமைந்து உள்ளன. இன்னொருபுறம் வீர் தேஜாஜி எனும் ஒரு காவல் தெய்வத்தின் சிலையும் உள்ளது. ஆலயத்தின் எதிர்புறத்தில் சற்று தொலைவில் ஒரு மயானம் உள்ளது. காலை மற்றும் மாலை நேரங்களில் ஆலயத்தை சுற்றி உள்ள பகுதிகளில் மயில்கள் வந்து விளையாடுவதைக் காணும் பொழுது ஆனந்தமாக இருக்கும்.

## ஆலயம் எழுந்த கதை

வெகு காலத்திற்கு முன் அந்த கிராமத்தில் குரு மகராஜ் என்ற ஒரு சிவபக்தர் வசித்து வந்தார். தினமும் அதிகாலை எழுந்து குளித்தப் பின் நடந்தே உஜ்ஜயினி மகாகாளேஸ்வர் ஆலயத்திற்கு சென்று அங்கு மகாகாளீஷ்வரரை தரிசனம் செய்த பின்தான் உணவு அருந்துவார். தேவாஸ் மற்றும் உஜ்ஜயினிக்கு செல்லும் பாதையின் இடையே நர்வர் என்ற நதி ஓடுகின்றது. அந்த காலத்தில் பலர் உஜ்ஜயினிக்கு நடந்தே செல்வது சாதாரணம். ஏன் எனில் நடந்து செல்பவர்கள் பல குறுக்கு வழிகளில் சென்று விடுவார்கள்.

அப்படி கட்டுப்பாட்டுடன் தினமும் நடந்து செல்லும் பழக்கத்தை வைத்திருந்தவர் ஒரு மழை காலத்தில் ஒரு சோதனையை சந்திக்க வேண்டி இருந்தது. எப்பொழுதும் போல காலை எழுந்து குளித்து விட்டு உஜ்ஜயினிக்கு கிளம்பியவர், நர்வர் எனும் கிராமத்து அருகில் இருந்த நதியில் ஏற்பட்டிருந்த திடீர் வெள்ளத்தி ால் மேலே செல்ல முடியாமல் தவித்தார். மழையும் நின்றபாடில்லை. என்ன

செய்வது என மனம் தடுமாறி நின்று கொண்டு இருந்த அவரை இரவு நர்வர் கிராம ஊர் தலையாரி தன் வீட்டிற்கு அழைத்துப் போய் மழை நின்ற பின் கிளம்பிச் செல்லும்படிக் கூறி உணவு அருந்த அழைத்தார். ஆனால் குரு மகராஜ் உணவு அருந்த மறுத்து விட்டு தன் சங்கல்பத்தைக் கூறி விட்டார். நதியின் வெள்ளம் அடங்க இரு நாட்கள் ஆகும் என்ற அளவில் மழை பெய்து கொண்டு இருந்தது. இரண்டு நாட்களும் எப்படி சாப்பிடாமல் இருப்பார் என குழம்பிய தலையாரியும் அவரைக் இரவு அங்கேயே தங்கிக் கொள்ளுமாறு வற்புறுத்திய பின் இருவரும் தூங்கச் சென்றனர். குரு மகராஜ் அந்த கிராம தலையாரியின் வற்புறுத்தலால் ஒரு கோப்பை பால் மட்டும் அருந்தினார். அன்று இரவு குரு மகராஜின் கனவில் சிவபெருமான் தோன்றி 'பக்தா உன் பக்தியை மெச்சுகின்றேன். இனி நீ உஜ்ஜயினிக்கு வந்து என்னை தரிசிக்க வேண்டாம். மீண்டும் பிலாவலிக்கே திரும்பிச் சென்று உனக்கு எந்த இடத்தில் விருப்பமோ அங்கு ஐந்து வில்வ இலைகளை வைத்து அதன் மீது ஒரு கல்லை வைத்து விடு. மறுநாள் நான் அங்கே எழுந்தருளுவேன்' எனக் கூறி விட்டு மறைந்தார். அன்று இரவு இருமுறை அவருக்கு அதே கனவு வந்ததாம்.

மறு நாள் காலை மழை நின்றது. ஆனால் நதியின் வெள்ளம் அடங்கவில்லை என்பதால் உஜ்ஜயினிக்கு செல்ல முடியவில்லை. ஆகவே காலையில் எழுந்து குளித்து விட்டு பிலாவலிக்குத் திரும்பியவர், தன் கனவைக் குறித்து கிராமத்தினரிடம் கூறினார். ஒருவரும் அதை நம்பவில்லை. ஆனால் குரு மகராஜோ பரிபூரண நம்பிக்கையுடன் ஒரு சிறு குன்றின் மீது (தற்பொழுது ஆலயம் உள்ள இடத்தில்) ஐந்து வில்வ இலைகளை வைத்தப் பின் அதன் மீது ஒரு கல்லையும் வைத்து விட்டு தூங்கச் சென்றார். இரவு திடீரென பெரும் மழை பெய்து ஓய்ந்தது. அடித்தக் காற்றில் வில்வ இலைகள் பறந்து விட்டன. காலை எழுந்து தான் வில்வ இலைகளை வைத்திருந்த இடத்திற்கு சென்று பார்த்தவர் ஒரு அதிசயத்தைக் கண்டார். வில்வ இலைகளை வைத்திருந்த இடத்தை சுற்றி இருந்த மண் விலகி இருந்தது. பூமியிலே புதைந்திருந்த ஒரு லிங்கம் வெளியில் தெரிந்தது. ஓடிச் சென்று ஊராரை அழைத்து வந்து அந்த அற்புதக்

காட்சியைக் காட்ட அனைவரும் வாயடைத்து நின்றனர். சிவபெருமான் தான் அளித்த வாக்குறுதிப்படி உஜ்ஜயினி மகா காளீஸ்வரராக அங்கேயே எழுந்தருளி விட்டார். அந்த லிங்கம் தோன்றிய இடத்திலேயே சிறு ஆலயம் அமைத்தனர். ஆகவே அந்த ஆலயத்திற்கு மகா காளீஸ்வரர் ஆலயம் எனப் பெயரிட்டனர். அதற்கு மறு நாள் முதல் குரு மகராஜ் உஜ்ஜயினிக்குச் செல்வதை நிறுத்தி விட்டு அந்த இடத்திலேயே வழிபடத் துவங்கினார். அவர் மரணம் அடையும் வரை அந்த சிவலிங்கத்தை வணங்கிய பின்னரே உணவையும் உண்டு வந்தார். அதனால்தான் அந்த ஆலயத்தின் பெயரையும் மகாகாளேஸ்வரர் என்று வைத்தார்கள்.

உஜ்ஜயினி அல்லது இந்தூருக்கு சென்றால் அங்கிருந்து 35 கிலோமீட்டர் தொலைவில் உள்ள தேவாஸ் சிற்றூரை அடையலாம். அங்கு செல்ல நிறைய பஸ், டாக்ஸி மற்றும் ரயில் வசதியும் உள்ளன.

(Also read the story with more pictures in https://santhipriya.com/2013/10/மால்வா-மத்ய-பிரதேசம்-மாவ-2.html )

# Bilavali Siva Temple, Dewas

## Santhipriya



Most of the temples in Madhya Pradesh, India are famous on their own reasons. Although the history of all such temples are not available, their history is available through local folklore. One such temple is called Bhilavali Shiva temple also called Mahakaleshwar temple which is in the outskirt of Dewas. The name derives importance because of its fraternal bond with the Mahakaleshwar Temple in Ujjain,

The temple is located on a small hillock near the Agra - Bombay main road. The Shiva Linga enshrined inside the temple is reportedly hundred years old and self-appeared in the same spot. The Shiva Linga, which was said to be one foot high when it was found has now grown to over three feet. While on the opposite side of the temple are the sanctums of Lord Hanuman and Lord Kala Bhairava, on the other side is a sanctum of a guardian deity named Veer Taraji. There is a cemetery a short distance away on the opposite

side of the temple. In the mornings and evenings it is a pleasure to see peacocks playing around the temple.

## The story of the temple

Long ago, there lived in Dewas, one Shri Guru Maharaj, devotee of Lord Shiva who used to wake up every day in the morning and after taking bath, would walk to Ujjain to offer worship to Lord Mahakaleshwar in the Temple there. He partook food only thereafter. In between Dewas and Ujjain run a river called Narwar. It was not uncommon in those days for people to shuttle between Dewas and Ujjain as there were many shortcuts to go.

While Shri Guru Maharaj faithfully maintained the said routine, once he faced a hurdle in reaching Ujjain. It was raining heavily since morning and though Shri Guru Maharaj did not wish to break the routine and proceeded to Ujjain braving the rain, he could not cross river Narwar as the river was in spate due to nonstop rain. There was no sight of rain fury coming to an end. Unable to proceed further, when he stood under a tree braving rain, the village head who happened to notice him took him to his home and offered shelter and food. But though Shri Guru Maharaj stayed there, when he was unwilling to break his vow and take food which he had been maintaining for so long, the head of the village advised him to take rest after taking at least a cup of milk which was not a food and then proceed once the rain stopped. He persuaded him to drink a cup of milk and both went to sleep. In the night Lord Shiva appeared twice in the dream of Shri Guru Maharaj and admired his devotion towards him and advised him to go back to Dewas, place three Vilva leaves in some place of his liking and he (Lord Shiva) would manifest there for him to offer prayer and worship there instead of going to Ujjain.

The next morning too there was no sight of the rain stopping, heavy showers continued to lash the place intermittently. He could not proceed to Ujjain as the river was in spate and heavily flooded. Therefore he returned back to Dewas and narrated his dream to the

villagers there. On reaching Dewas, he found that the rain had stopped. Though none were willing to believe the story, determined Shri Guru Maharaj deposing absolute faith on the Lord who appeared in his dream, plucked three leaves of Vilva from the tree, placed them in the present site of the temple, kept a stone over it and went back to his home. In the night it again rained heavily but stopped next morning. He woke up as usual, took bath and went to the site where he had kept the Vilva leaves to see whether what his Lord promised in his dream came true. To his utter surprise, he found a small Shiva Ling, partly visible buried inside the land in the same spot where he had placed the Vilva leaves with the top layer of the soil washed away due to the rain the previous night. He ran to the village and brought everyone to see the miracle and they remained speechless at the site of the buried Shiva Ling which was partly visible. They dug and took out the Shiv Ling, installed it in the same place and constructed a small place of worship and named it as Mahakaleshwar. From then on Shri Guru Maharaj began to offer worship by maintaining his usual routine there itself instead of going to Ujjain. He continued worship till he died.

Dewas can be reached either from Indore or from Ujjain as the distance is less than 35 Kilometers from both the cities. Plenty of buses and Taxis ply daily besides availability of train facility.